இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 Fax: 021 - 222 9041, ISSN 1391-7633

மலர் : 141 | இதழ் : 03 | திகதி : 12-02-2017 | விலை : 20.00

# யாழ். மறைமாவட்டத்தின் புதிய பங்காக மணியந்தோட்டம் பங்கு உதயம்

## அமதிகளின் பணித்தளமாகின்றது



யாழ். மறைமாவட்டத்தின் புதிய பங்காக மணியந்தோட்டப் பங்கை யாழ். ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் ஏற்படுத்தியுள்ளார். கடந்த 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை மணியந்தோட்டம் கர்த்தர் ஆலயத்தில் உத்தியோகபூர்வமாக ஆயர் அவர்கள் திருப்பலி ஒப்புக்கொடுத்து இவ் அறிவிப்பை மேற்கொண்டார். இப்புதிய பங்கின் துணைப்பங்குத் திருச்சபைகளாக உதயபுரம். வச்சந்தபுரம். பூம்புகார், எழிலூர், கிழக்கு அரியாலை என்பன அமைகின்றன. இப்புதிய பங்கின் மேய்ப்புப் பணியினை அமலமரித் தியாகிகள் சபையினரிடம் ஒப்படைத்துள்ளார் யாழ். ஆயர்.

இந்நிகழ்வில் கருத்துரைத்த ஆயர் அவர்கள், அமலமரித் தியாகிகள் யாழ். மறை மாவட்டத்தின் வளர்ச்சியில் ஆரம்ப காலமுதல் புரிந்த மேன்மையான சேவைகளை எடுத்துரைத்தார். அவ் வகையில் அவர்கள் பணி தொடர இப் புதிய பங்கு களம் அமைக்கும் எனக் குறிப்பிட்டார். மேலாக கொழும்புத்துறையில் அமைந்துள்ள அமதிகளின் உருவாக்க மையத்தில் பயிற்சிபெறும் அருட் சகோதரர்களுக்கு ஒரு பணிக்கள உருவாக்க மையமாகவும் இப்புதிய பங்கு அமையும் எனக் குறிப்பிட்டார்.

இத்திருப்பலியில் ஆயருடன் அமதிகளின் மாகாண முதல்வர் அருட்பணி எட்வின் வசந்தராஜா அடிகளாரும், பாசையூர் பங்குத்தந்தை அருட்திரு லியோ ஆம்ஸ்ரோங் அடிகளாரும் புதிய பங்கின் முதல் பங்குத்தந்தையாக நியமனம் பெறும் அருட்திரு எஸ்.எம்.செபஸ்ரியன் அடிகளாரும் இணைந்திருந்தனர். ஆயரின் எதிர்பார்ப்பை இப் புதிய பங்கு மேப்புப்பணியில் பூர்த்தி செய்வோம் என மாகாண முதல்வரும், பங்குத்தந்தையும் எடுத்துக்கூறினர். இப்புதிய பங்கானது முன்னர் பாசையூர் பங்கின் மேய்ப்புப் பணி ஆளுகைக்குள் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மறை மாவட்ட அன்பிய ஊக்குவிப்பாளர் குருக்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு

2017 ஆம் ஆண்டு திருவழிபாட்டுக் காலத்தை திருவருகைக் காலத்தோடு ஆரம்பித்தபோது தன்னுடைய ஆட்சிக் குட்பட்ட இறைமக்களுக்கு எழுதிய சுற்று மடலிலேயே தூய யோசவ்வாஸ் ஆண்டின் முக்கியத்துவத்தையும், யாழ். மறை மாவட்டத்தின் அன்பியங்களின் உருவாக்கம், வளர்ச்சி பற்றியும் யாழ். ஆயர் அவர்கள் முன்னிலைப்படுத்தியிருந்தமை நாம் அறிந்தது.

அந்த வகையில் பங்கின் அன்பிய செயற்பாடுகளை முன்னெடுக்கும், துரிதப் படுத்தும் வகையில் யாழ். மறை மாவட்டத்தின் அன்பிய இயக்குநர் அருட்பணி லியோஆம்ஸ்ரோங் அவர்களின் ஏற்பாட்டில், தேசிய அன்பிய இயக்கத்தின் வழிநடத்துதலில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு யாழ். மறைமாவட்டக் குருக் களுக்கு, அன்பிய பொதுநிலையினர் ஊக்குவிப்பாளர்களுக்கு பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடாத்தப்பட்டது.

கடந்த 23.01.2017 தொடக்கம் 24.01.2017 வரை இரண்டு நாட்கள் குருக்களுக்கான விழிப்பூட்டல் கருத்துப் பகிர்வாக அது அமைந்திருந்தது. 22ம் திகதி காலையிலேயே ஆயர் பேரருட்திரு.யஸ்ரின் ஆண்டகை அவர்களின் பிரசன்னமும், ஆசீரும் அமர்வை ஆரம்பித்து கொண்டு செல்ல உறுதுணையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. தேசிய அன்பிய இயக்குநர் அருட்பணி லைலி பெர்னாண்டோ அவர்கள் அன்பிய

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்)

# 25ஆவது நோயுற்றோர் உலக நாளுக்கான திருத்தந்தையின் செய்தி

2017 ஆம் ஆண்டு பெப்ரவரி 11ம் திகதி, லூர்து நகர் அன்னை மரியாவின் திருநாளன்று கொண்டாடப்படும் 25 ஆவது நோயுற்றோர் உலக நாளுக்கென வழங்கிய செய்தியில், நோயுற்றோரின் தேவைகள் குறித்து சிந்திக்கவும், அவர்களுக்கு உதவுகிறவர்களை நன்றியோடு எண்ணிப் பார்க்கவும். நோயுற்றோர் உலக நாள் நமக்கு வாய்ப்பளிக்கிறத் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்)



ஐக்கிய இராச்சிய பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற சபையின் தலைவருமாகிய கௌரவ நாசிபி அவர்கள் அண்மையில் யாழ் ஆயர் பேரட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் சந்தித்து உரையாடினார். இச் சந்திப்பின்போது யாழ் ஆயர் அவர்கள் யாழ் குடாநாட்டின் சமகால நிலைமைகளைப் பற்றியும் தமிழர் அரசியல் நிலைப்பாடு பற்றியும் கௌரவ நாசிபி அவர்களுக்கு எடுத்துக் கூறினார்.



பிரித்தானிய தூதரகத்தின் நீதி சமாதான ஆணைக்குழுவின் ஆணையாளர் அவர்கள் கடந்த வாரம் ஆயர் இல்லத்தில் ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களைச் சந்தித்து உரையாடினார்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா. 127:1)

## எமது எண்ணம்

### சமூகமாற்றத்திற்கான தலைமைத்துவப் பண்பு இளைஞர்களுக்கு அவசியமானது

தலைமைத்துவம் என்பது அதிகாரம் செய்வதல்ல. அடக்கியாள நினைப்பதுமல்ல. தலைமைத்துவம் என்பது நல்லதைச் செய்வதற்கான நல்ல சிந்தனைகளை உள்வாங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல். அந்த வழிகாட்டல் என்பது சமூக பொறுப்பு வாய்ந்தது. வெறுமனே கடமைக்கு செய்வதல்ல. ஆகவே பொறுப்புள்ள வழிகாட்டல் என்ற உன்னத பணி. சமூகத்தை குறிப்பாக இளம் பிராயத்தவர்களுக்கு ஏற்ற முறையில் அமைதல் வேண்டும். தமிழ் இளைஞர்கள் யுவதிகள் இன்று எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தடுமாற்றங்கள் என்பது சரியான வழிகாட்டல் இல்லாத நிலையை கோடிட்டுக் காட்டுகின்றது.

இயேசுகிறிஸ்து உலகத்திற்கு சிறந்ததொரு தலைமைத்துவ பண்பை வெளிப்படுத்தினார். எந்தச் சமயத்தவர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அந்த தலைமைத்துவப் பண்பு குழந்தைகளை வாழ விடுங்கள் என்பதாகும். " நீங்கள் எனக்காக அழ வேண்டாம், உங்கள் பிள்ளைகளுக்காக அழுங்கள்" என்று யேசுகிறிஸ்து கூறியது. அர்த்தமுள்ள புரிதலை உலகத்துக்கு வழங்கியிருக்கின்றது.

ஆனால் இன்று உலக நடைமுறைகளை பார்க்கும்போது அரசியல் தலைவர்களை மக்கள் விழுந்து கும்பிட வேண்டும் என்ற தவறான செய்தி கொடுக்கப்படுகின்றது. இங்குதான் இளைஞர்கள் மத்தியில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த பண்பை உடைத்தெறிய வேண்டும் என்ற நோக்கில் இளைஞர்கள், மாணவர்கள் செயற்படுகின்றனர். ஆனால் மாணவர்களின் அவ்வாறான செயற்பாடுகளும் ஏற்புடையதல்ல. அதனை ஊக்குவிக்கவும் முடியாது. ஏனெனில் சில தலைவர்களிடம் காணப்படும் அவ்வாறான பண்புகளை உடைத்தெறிய வேண்டும் என்ற நோக்கில் இளைஞர்கள் செயற்படும்போது வன்முறைகள் மற்றும் மூத்தவர் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்காகாத தன்மைகளை காண முடிகின்றது.

ஆகவே இளைஞர்களிடம் காணப்படும் இவ்வாறான வேகமான செயற்பாடுகளை கட்டுப்படுத்தி தலைமைத்துவத்துக்கான நல்ல காரணங்களை கற்பிக்க வேண்டும். இளைஞர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை உருவாக்க வேண்டும். சமூகத்தில் நல்லமுறையில் செயற்படும் சிறந்த தலைவர்களை அல்லது சிறந்த ஆசான்களை இனம்கண்டு அவர்களுடன் உரையாட வேண்டும். சிறந்த தொடர்பாடல்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறான நல்ல ஒழுக்கமுள்ள செயற்பாடுகள் பாடசாலை மட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான பண்புகள் குறிப்பிட்ட சில ஆசிரியர்களினால் கற்பிக்கப்பட்டாலும்கூட சமூகத்துக்கு கட்டுப்படக் கூடிய அல்லது மூத்தவர்களை மதிக்கின்ற நடைமுறைப் பண்புகள் மாணவர்களிடம் குறைவடைந்துள்ளன. அவ்வாறான பண்புகள் குறைவடைந்த நிலையில் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து விட்டு வெளியேறும் மாணவர்கள் சமூகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில் செய்றபடுகின்றனர். தலைவர்கள் என்று கூறப்படுபவர்கள் சிலரும் விடுகின்ற தவறுகள் அல்லது நான் என்ற அகங்காரத்துடன் செயற்படும் போது அது இளைஞர்களையும் மாணவர்களையும் மேலும் தவறான வழிக்கு கொண்டு செல்லக்கூடிய நிலையை உருவாக்கி விடுகின்றது. அல்லது மேற்படி பிழையான தலைவர்களின் செயற்பாடுகளை பின்பற்றி இளைஞர்கள் மாணவர்கள் மேலும் தவறான வழிக்கு செல்லக்கூடிய ஆபத்தான நிலையையும் ஏற்படுத்தி விடுகின்றது.

ஆகவே எதிர்கால சந்ததியை கொண்டுநடத்தக் கூடிய அளவுக்கு நன்மதிப்பு பெற்ற பொறுப்புள்ள ஆசிரியர்கள், சமூகப் பெரியோர் முன்நின்று செயற்பட வேண்டும். பிழையான தலைவர்களின் வழிநடத்தல்கள் தொடர்பாக எச்சரிக்கையுடன் செயற்பட்டு மக்களை நல்வழிப்படுத்தவேண்டிய கடமைகளை உரியமுறையில் செய்தல் அவசியமாகும். மாணவர்களின் எழுச்சிமிகு சிந்தனைக்கு உயிர் கொடுக்கக்கூடிய ஒழுக்கமுள்ள மூத்தவர்கள் சரியான தலைமைத்துவத்தை கற்பிக்க வேண்டும். இல்லையேல் கட்டவிழ்த்து விடப்பட்ட முறை தவறிய பண்பாடுகள்தான் தலைவிரித்தாடும்

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

# ஊறணி புனித அந்தோனியார் தற்காலிக ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டுதல்



போரினால் 1990.06.15 இல் இடம் பெயர்ந்து நீண்டகாலமாக அகதி முகாம்களிலும் உறவினர் இல்லங்களிலும் வாழும் மக்களை, நல்லாட்சி அரசின் நல்லெண்ண அடிப்படையில் மீளவும் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தும் நடவடிக்கைகளில் ஒன்றாக வலி.வடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள, காங்கேசன்துறை, ஊறணி, மயிலிட்டிக் கிராமங்களின், பெரும்பகுதி விடுவிக்கப்படாத நிலையில் ஒரு சில பகுதிகள் 27 வருடங்களின் பின்னர் கடந்த 2016 நவம்பர் 4 ஆம் திகதி இராணுவத்தினரால் மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப் பட்டன.

அங்கு சென்ற ஊறணி மக்கள் 2012 ஏப்ரல் மாதத்தின் பின்னர் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட பாரிய ஆலயத்தை நினைத்து கண்ணீர்விட்டழுதனர். தமது வாழ்விடங்களை அமைப்பதற்கு முன் பழைய ஏற்பாட்டின்படி, இறுதிக் காலத்தில், 50 வருட அடிமைத் தனத்தில் இருந்து திரும்பி வந்து தமது பாரிய சாலமோனின் ஆலயத்திற்குப் பதிலாகச் சிறிய ஆலயமொன்றைக்கட்டியெழுப்பிய இஸ்ராயேலரில் எஞ்சியோரைப் போன்று, தரைமட்டமாக்கப்பட்ட புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில், யாழ். ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆலோசனையுடனும், ஆசீருடனும் தற்காலிக ஆலயம் ஒன்றை அமைக்க 2017 ஜனவரி 14 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

இவ்வடிக் கல்லினை அருட்பணி தி.தேவராஜன் அடிகள் மற்றும் மண்ணின் மைந்தன் இ.யே.அன்ரனிபாலா அவர்கள் இணைந்து நாட்டியமை குறிப்பிடத்தக்கது.

# CCBI புதிய உதவி தலைவர் பேராயர் ஜார்ஜ் அந்தோனிசாமி

CCBI என்ற, இந்திய இலத்தீன் வழிபாட்டு முறை ஆயர் பேரவையின் புதிய உதவித் தலைவராக, சென்னை-மயிலைப் பேராயர், ஜார்ஜ் அந்தோனிசாமி அவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின், போபாலில் நடைபெற்றுவரும் CCBI ஆயர் பேரவையின் 29வது நிறையமர்வு கூட்டத்தில், இப்பேரவையின் புதிய-தலைவராக, மும்பை பேராயர் கர்தினால் ஆசுவால்டு கிரேசியஸ் அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இப்பேரவையின் புதிய உதவித் தலைவராக, சென்னை-மயிலைப் பேராயர் ஜார்ஜ் அந்தோனிசாமி அவர்களும், புதிய பொதுச் செயலராக, டெல்லி பேராயர் அனில் ஜோசப் தாமஸ் கூட்டோ அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் பணிக்காலம் ஈராண்டுகள் ஆகும். CCBI ஆயர் பேரவையின் தலைவராகப் பணியாற்றி வந்த கர்தினால் கிரேசியஸ் அவர்கள், மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு, அதன் தலைவராக, அனைத்து ஆயர் பிரதிநிதிகளாலும், ஒரேமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என, அப்பேரவையின் பேச்சாளர் தெரிவித்தார்.

## மாந்தை திருத்தலத்தில் புதிய ஆலயம்

மருதமடு அன்னையின் ஆரம்ப இருப்பிடமான மாந்தை . திருத்தலத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய ஆலயம் எதிர்வரும் பெப்ரவரி 18 ஆம் திகதி மாலை திறந்துவைக்கப்படவுள்ளது.

இப்புதிய ஆலயத்தினை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் பேரருட்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை திறந்து வைப்பார்.

இத்திருத்தலத்தின் பெருவிழாவும், திருச் சொரூப ஆசீரும் அன்றையநாளில் நடைபெறும்.

# திருவுளச்சபை உருவாக்கு தளம் கொழும்புத்துறையில் திறந்து வைப்பு

திருவுளச்சபை உருவாக்கு தளத்திற்கான புதிய கட்டிடத்தொகுதி கொழும்புத் துறையில் உள்ள சபை திருவடி வளாகத்தில் கடந்த 5ம் திகதி திறந்து வைக்கப்பட்டது. திருவுளச் சபையின் உலகளாவிய முதல்வர் அருட்பணி ஜேம்ஸ் ரன்ஸ்ரன் அடிகள் திறந்து வைத்தார்.


யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் பேனாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை புதிய கட்டடத்தை ஆசீர்வதித்து திருப்பலியை ஒப்புக் கொடுத்தார். சபையின் முதல்வர் அருட்பணி டன்ஸ்ரன் அடிகள், மாகாண முதல்வர் அருட்பணி யுஸ்ரஸ் அடிகள், யாழ்.மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகள் ஆகியோர் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

யாழ் திருச்சபையில் திருவுளச்சபையின் பங்களிப்பு அதன் வளர்ச்சி, இத்திருவடி இல்லத்தின் வரலாற்று முக்கியத்துவம், உருவாக்கு நோக்கம் தொடர்பாகவும் தமது உரையில் சபை யின் உலகளாவிய முதல்வர் தெரிவித்தார்.

இவ்விழாவில் திருவுளச்சபையின் அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், மணத் துறவு ஆண்கள், இணை உறுப்பினர்கள், மற்றும் பல குருக்கள், துறவியர், நண்பர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள்

அருட்திரு.ஜே.செபஸ்ரியன்



இன்றைய மாணவர்கள் ஏன் வன்முறையாளர்களாக மாறுகி றார்கள்? வன்முறைக்கு அடிமையாகி தீயசக்திகளைக் கொள்கைகளாகக் கொண்டு தலைவர்களாக முயற்சிக் கின்றார்கள். காரணம் என்ன? கடந்த ஆண்டு 14 வயது மாணவனை அவ னது வகுப்புத் தோழர்கள் செல்போன் வாங்க வேண்டுமென்பதற்காக கொலை செய்தார்கள். 11 ஆம் வகுப்பு மாணவன் திருச்செங்கோட்டில் லோகநாயகி என்ற பெண்மணியைத் துப்பாக்கியால் சுட் டான். காரணங்கள் பல...

**தொலைக்காட்சி:**
மாணவர்கள் அதிகமான வன்முறைக் காட்சிகளைத் தங்கள் மனதிலே பதிய வைக்கின்றனர். பிறரது துன்பம், அழுகை மனதில் குறைவான சலனத்தையே ஏற்படுத்துகின்றது.

**இணையதளம்:**
பாலியல் வன்முறைகளைக் கண்டு களித்து, பெண்களைப் பாலியல் பொருள் களாகவே பார்க்கப் பழகுகின்றனர்.

**கனினி விளையாட்டுக்கள்:**
கனினி மையங்களிலும், அலைபேசி யிலும் பொழுதுபோக்காக கொலைகார நகரம், ஆயுத மனிதன், இரத்தப் பணம் போன்ற விளையாட்டுக்களின் பெயரிலே வன்முறைகளைக் கண்டு களிக்கின்றனர் என்பதே உண்மை.

**குடி, போதைப்பழக்கம்:**
நகர்ப்புற மாணவர்கள் தங்கள் தீய நண்பர்களால் குடிப்பழக்கத்திற்கு அடிமை யாகின்றனர். போதைப் பொருட்கள் வாங்க பணம் கிடைக்காதபோது வன் முறையைப் பயன்படுத்துகின்றனர்.

**பெற்றோரின் கண்காணிப்பின்மை:**
படிப்பு, அதிக மதிப்பெண்கள் போன்ற வற்றில் அக்கறை செலுத்தும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் பழக்கங்கள், மனநிலைகள், உணர்வுகள், தோழர் கள், பொழுதுபோக்குகள் போன்றவற் றைக் கவனிக்க மறந்து விடுகின்றனர்.

**தோழர்களின் தொந்தரவு:**
தீய பழக்கங்களான போதைப் பழக்கம், கனினி விளையாட்டுக்கள், உணவு வகைகள் பள்ளித் தோழர்களின் அழுத் தத்தினால் வருபவை என்பதை மாண வர்களே ஒத்துக்கொண்டுள்ளனர்.

**வாசிக்கும் பழக்கம் குறைவு:**
வாசித்தல் மனதை செம்மைப்படுத்து கின்றது. கற்பனை, படைப்பாற்றல், சிந்தனை போன்றவற்றை வளர்க் கின்றது. இந்தப் பழக்கம் இல்லாததால் வன்முறை நிறைந்த மனநிலை வளர் கிறது.

**உடல் உழைப்பின்மை:**
பாடசாலைக்கு நடந்தோ, சைக்கிள்க ளிலோ சென்றவர்கள் எல்லாம் கார், பஸ், மோட்டார் சைக்கிளில் செல்கின் றனர். உடற்பயிற்சி குறைந்து விட்டது. தீய சக்திகளுக்கு அடிமையாகாமல் கடமை கண்ணியம் கட்டுப்பாட்டில் வளர் கின்ற போது இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்களாக உருவாகின் றார்கள். இதை ஒவ்வொரு மாணவர் களும் தம் மனதில் கொள்வது அவசி யம்●

## கண்ணாடி கற்பிக்கும் பாடம்

நாம் அடிக்கடி கண்ணாடியைப் பார்க்கிறோம். முகத்தில் ஏதேனும் அழுக்கோ, கறையோ இருந்தால் கண்ணாடியில் அது அப்படியே தெரிகின்றது. அந்தக் கறையைக் கண்ணாடி அதிகமாகவோ, குறை வாகவோ காட்டுவது இல்லை. உள் ளதை உள்ளபடியே காட்டி விடு கின்றது. அதைப்போல் பிறரிடம் எந்த அளவிற்கு குறை இருக்கின்றதோ அந்த அளவிற்குத்தான் அதைச் சுட்டிக்காட்ட வேண்டும். மிகைப் படுத்திக் கூறக்கூடாது. கண்ணாடி முன்நிற்கும் போதுதான் அது கறை யைக் காட்டுகின்றது. அதை விட்டு அகன்று விட்டால் அது மௌன மாகிவிடும். அதேபோல் அயலா ரின் குறையை நேரடியாகவே சுட் டிக்காட்ட வேண்டும். முதுகுக்குப் பின்னால் பேசக்கூடாது. முகத்தி லுள்ள கறையை கண்ணாடி காட்டி யதால் அதன் மீது கோபமோ எரிச் சலோ படுவதில்லை. அதைப்போல நம்மிடம் உள்ள குறைகளை யாரே னும் சுட்டிக்காட்டினால் அவர் மீது கோபம் கொள்ளாமல் குறைகளைத் திருத்திக் கொள்வோம். கண்ணாடி நம் முகத்தை மட்டுமல்ல, அகத்தை யும் காட்டுகிறது. முகத்தை அழகு படுத்தும்போது அகத்தை அலங்கரிக்க அயலாரின் திருத்தங்களையும் அன் போடு வரவேற்போம்.

## திருஅவைக் குட்டிச் செய்திகள்

❖ போர்த்துக்கல் நாட்டின் பாத்திமாவில், அன்னை மரியா காட்சி கொடுத்ததன் நூறாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, வரும் மே 12, 13 ஆகிய திகதிகளில் பாத்திமா திருத்தலத்திற்கு திருத்தந்தை திருப்பயணம் மேற்கொள்கிறார்.

❖ காலநிலை பாதிப்பின் எதிர்விளைவு களை அதிகம் அனுபவிக்கும் நாடு களில் எட்டாவது இடத்திலுள்ள பாகிஸ் தானில், பத்து இலட்சம் மரங்களை நடுவதற்கு அந்நாட்டு கத்தோலிக்க கரித்தாஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

❖ இரண்டாண்டுகளுக்கு முன் நேபா ளத்தில் 9000 பேரை பலி கொண்ட நில அதிர்வால் அழிவுக்குள்ளான கட் டடங்களை மீண்டும் கட்டிக்கொடுக் கும் திட்டத்தை இந்திய கிளரேசியன் துறவு சபையினர் நிறைவேற்றி வரு கின்றனர்.

❖ பிரித்தானியர்கள் ஐரோப்பிய ஒன்றி யத்தை விட்டு வெளியேற முடிவு செய் துள்ளதைத் தொடர்ந்து, அந்நாட்டில் அன்னியருக்கு எதிராக எழுந்துவரும் பொறுப்பையும் பயத்தையும் தடுக்க கிறிஸ்தவ சபைகளும், இயேசு சபை புலம்பெயர்ந்தோர், பணிக்குழுவான ஜே.ஆர்.எஸ் அமைப்பும் இணைந்து இலண்டன் யுனைட் என்ற முயற்சி யைத் துவக்கியுள்ளனர்.

❖ அகில உலகச் சட்டங்களுக்குச் சிறி தும் மதிப்பளிக்காமல், தென்சூடான் நாட்டில் நடைபெறும் வன்முறைகளை வத்திக்கான் வன்மையாகக் கண்ட னம் செய்கிறது என்று மனித உரிமைகள் அவை கூட்டத்தில் பேசிய வத்திக்கான் உயர் அதிகாரி பேராயர் ஜவன் ஜுர்கோவிச் தெரிவித்தார்.

❖ சட்டத்திற்குப் புறம்பான குற்றவியல் தொடர்புடைய ஆயுத வர்த்தகத்தை ஒழிக்க கடும் நடவடிக்கைகள் எடுப்பதே, பேரழிவுகளில் ஈடுபடுபவர்களைத் தடுப் பதற்கு அடிப்படையானது என்று ஐ.நா. வுக்கான வத்திக்கானின் நிரந்தரப் பிரதிநிதியான பேராயர் பெர்னார் தித்தோ அவுசா ஐ.நா. பாதுகாப்பு அவை யில் கூறினார்.

❖ கடும் மனிதாபிமான நெருக்கடிகளை எதிர்நோக்கும் உக்ரைன் நாட்டிற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சார்பாக ஏறக்குறைய 60 இலட்சம் யூரோக்கள் நிதியுதவியை வழங்குவ தாக வத்திக்கான் கோர் எனும் அவை அறிவித்துள்ளது.

❖ இஸ்லாமியர்களின் தொழுகைக்கு ஒலிபெருக்கி வழியே விடுக்கப்படும் அழைப்பினை ஒலி மாசுபாடு என்று கூறி, இஸ்ரேல் அரசு தன் நாட்டில் தடை செய்ய நினைப்பது தவறான ஒரு முயற்சி என்று எருசலேம் இலத்தீன் வழிபாட்டு முறை அப்போஸ்தலிக்க நிர்வாகி பேராயர் பியர்பத்திஸ்தா பிட்ச பாலா கூறியுள்ளார்.

❖ 2016ஆம் ஆண்டில் திருத்தந்தை பிரான்சிஸ் ஆற்றிய திருவழிபாடுகள் மற்றும் அவர் தலைமையேற்று நடத் திய பொது நிகழ்வுகளில், 39, 52, 140 பேர் கலந்துகொண்டனர் என்று வத்திக்கான் அறிவித்துள்ளது.

❖ சிரியாவில் உள்ள கிறிஸ்தவர்கள், உரையாடல் மற்றும் தொடர்புகளின் அடையாளங்களாக இருக்கின்ற வேளை, இந்த அடையாளங்கள் மறையும் போது மத்திய கிழக்குப் பகுதி முழுவதன், சமூக மற்றும் சமயக் கூறுகள் துன்புறு கின்றன என்று சிரியாவுக்கான வத்திக் கான் தூதர் கர்தினால் மரியோ செனாரி தெரிவித்தார்.

❖ இந்திய ஆயர் பேரவையின் சமுதாய அங்கமாகச் செயலாற்றும் கத்தோலிக்க கரித்தாஸ் அமைப்பு, 2017 ஆம் ஆண்டு தவக்காலத்தில் புற்றுநோய் தடுப்பு மற் றும் புற்றுநோயுற்றோருக்கான உதவி களைத் தீவிரப்படுத்த முடிவு செய்துள் ளது. இந்தியாவில் ஒவ்வோர் ஆண் டும் 7 இலட்சத்திற்கும் அதிகமானோர் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். இவர்களில் 5,56,400 பேர் இறக் கின்றனர். இந்தியாவில் ஏறத்தாழ 25 இலட்சம் பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

❖ சுவிட்சலாந்து நாட்டில் 530,000 பேர் வறுமையில் வாடுகின்றனர் என் றும், 120,000 த்திற்கும் அதிகமானோர் வேலையேதும் இன்றி தவிக்கின்றனர் என்றும் அந்நாட்டு கரித்தாஸ் அமைப்பு, அறிக்கையொன்றை வெளியிட்டது.

❖ அணுசக்தி அலைகள் மனித குலத் திற்கு ஆபத்தானவை என்பதால், அவற்றை நாங்கள் முழுமையாக எதிர்பார்ப்பதாக தென்கொரிய ஆயர் பேரவையின் சுற்றுச் சூழல் பணிக் குழுத் தலைவர் ஆயர் பீட்டர் காங் உ- இல் கூறினார்.

❖ 2017 ம் ஆண்டில், நேபாள நாட்டு தலத் திருஅவை, குடும்பங்களை தன் பணிகளின் மையமாகக் கொண்டு செயலாற்றும் என்று அந்நாட்டு அப் போஸ்தலிக்க பிரதிநிதியான ஆயர் பால் சிம்மிக் கூறினார்

❖ 2016ம் ஆண்டில், உலகில் 90 ஆயிரம் கிறிஸ்தவர்கள், இயேசுவைப் பின்பற்றிய பற்றுமிக்க நம்பிக்கையின் காரணமாகக் கொல்லப்பட்டனர் என்று சமூகவியலாளர் மாசிமோ இன்ட் ரோவிக்கோ தெரிவித்தார். 2016 ம் ஆண்டில், ஒவ்வோர் ஆறு நிமிடத்திற்கு ஒருவர் என்ற விகிதத்தில் ஏறக்குறைய 90 ஆயிரம் கிறிஸ்தவர்கள் கொல்லப் பட்டனர்.

❖ சாதிப் பாகுபாடு என்பது மிகப் பெரும் சமூகப் பாவம். தீண்டாமை என்பது திருஅவைக்குள் ஒரு நாளும் சகித்துக் கொள்ளப்படாது என அறி வித்துள்ள இந்திய ஆயர்கள், தலித் மக்களுக்கு சரிநிகர் வேலைவாய்ப்பு களை உறுதி செய்வது, அவர்களின் பொதுநிலைத் தலைமைத்துவப் பண்பை ஊக்கு வித்தல், ஏழை தலித் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல், சமூக நீதிக்கு உதவுதல், அவர்கள் நீதி யான உதவியைப் பெற உதவுதல் போன்றவற்றை உள்ளடக்கிய வழி முறைகளை வகுத்துள்ளனர்.

❖ இந்தியாவின் நகரங்களில் வாழும் சிறாரில் இரண்டு பேருக்கு ஒருவர் வீதம், வலைத்தளம் பாதுகாப்பு இல்லை என உணர்வதாகவும், ஏறக்குறைய 16 விழுக்காடு சிறார், தங்களுக்கு தொடர் பில்லாத செய்திகளை வலைத்தளத்தில் பெறுகின்றனர் என அறியமுடிகின்றது.




# அமலமரித்தியாகிகள் சபையினருக்கும், அமல மரித்தியாகிகள் சபையிலில்லாதோருக்கும் ஏற்பட்ட போட்டியும் புரிந்துணர்வின்மையும்

**- அருட்பணி S.V.B.மங்களராஜா -**

புதிதாக உருவாகியிருந்த யாழ்ப்பாணம் அல்லது வடக்கு ஒரு அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டத்தில் அதுவும் பல்வேறு சிக்கல் மத்தியில் வளர்ச்சிப்பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய கட்டத்தில் அங்கு பணியாற்றும் குருக்கள் பல்வேறு நாடுகளைச்சேர்ந்தவர்களாகவோ, பல்வேறு துறவறசபைகளைச் சார்ந்தவர்களாகவோ இருந்தால் சிக்கல்களும், பிரச்சினைகளும் இன்னும் அதிகரிக்க வாய்ப்புண்டு என்பதை விசுவாசப்பரப்புதல் சபை முன்னரே பல்வேறு நாடுகளிலிருந்து கிடைத்த அனுபவங்களிலிருந்து அறிந்திருந்தது. எனவேதான் முன்னர் றெய்னோட் அடிகள் இலங்கை அமலமரித்தியாகிகள் சபையினர் பணியாற்ற சிறந்த இடம் என்று அச்சபை நிறுவுனர். புனித யூஜின் டி மசனெட் ஆண்டகையிடம் விளக்கிக் கூறியதால் தமது சபையினரை இலங்கைக்கு அனுப்ப அவர் முன்வந்தபோது விசுவாசப்பரப்புதல் சபை அப்போது அந்த உதவியை ஏற்க மறுத்தது என்று முன்னர் பார்த்தோம். ஏற்கனவே இத்தாலியிலிருந்து மறைபணியாளர்கள் வரத்தொடங்கி அவர்கள் இலங்கைப் பணித்தளத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தமையால் தொடர்ந்தும் இத்தாலியில் இருந்து குருக்களை வர வழைத்தால் நல்லது. பிரான்ஸில் இருந்து ஆயர் யூஜீன் டி மசனெட் அவர்களின் அமலமரித்தியாகிகள் சபைக் குருக்களும் வந்து பணித்தளத்தில் இருந்தால் இரண்டு நாட்டுக் குருக்களுக்குமிடையில் ஏற்படக்கூடிய புரிந்துணர்வின்மையும் பிரச்சினைகளும் ஏற்கனவே உள்ள பிரச்சினைகளுடன் இன்னும் கூடுதலான பிரச்சினைகளுக்கு வழி வகுக்கலாம் என்பதால் இத்தாலிய மறை பணியாளருடனே திருப்தியடையலாம் என்று விசுவாசப்பரப்புதல் சபை கருதியிருக்கலாம் என்று பூடன்ஸ் அடிகள் குறிப்பிடுகின்றார். ஆயர் பெற்றக்கீனி யாழ்ப்பாண (வடக்கு) அப்போஸ்தலிக்க முதல்வராக இருந்தபோது அமலமரித்தியாகிகளுக்கும் (அநேகமாக பிரான்ஸ் நாட்டவர்கள்) அமலமரித்தியாகிகள் சபையில்லாதோருக்கும் (பிரான்ஸ் நாட்டவர்கள் அல்லாதவர்கள் இத்தாலியரைப் போன்றவர்கள்) ஏற்பட்ட நட்புறவின்மை. போட்டி மனப்பான்மை ஆகியவை மேற்குறிப்பிட்ட ஆபத்துக்களை நியாயப்படுத்துபவையாக இருந்தன. இந்தப் பின்னணியில் தான் அமலமரித்தியாகிகள் சபையினர் (வடக்கு) யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டத்திற்கு வருவதற்குமுன் ஏற்கனவே இங்கு பணியாற்றிக்கொண்டிருந்த ஐரோப்பிய மறைப்பணியாளர்கள் இந்த அப்போஸ்தலிக்கநிர்வாகமாவட்டத்தின் நிர்வாகப்பொறுப்பை துறவற சபைகளைச்சாராத குருக்கள் (Secular Priests) வசம் ஒப்படைக்க விரும்பியிருந்தார்களென்றும் அத்துடன் இங்கு பணியாற்றிக் கொண்டிருந்த சிஸ்டர்சியன் சபை (Cistercians)க் குருக்களாகிய இரண்டு ஸ்பானிய நாட்டவர்களாகிய கார்சியா (Garcia) ஒருனா (Oruna) அடிகள் ஆகியோர்தான் இங்கு செமேரியா அடிகள் தலைமையில் பணியை 1848ம் ஆண்டு ஆரம்பித்திருந்த அமலமரித்தியாகிகள் சபையினரை வெளியேற்ற மேற்கொண்ட முயற்சிக்கு தலைமைதாங்கியவர்கள் என்றும் செமேரியா அமதி அடிகளுக்கு ஒரு பயம் இருந்தது. இந்தப்பயம் 1848ம் ஆண்டு பெற்றக்கீனி அவர்கள் இத்தாலியிலுள்ள அனைத்துலக இயேசு சபை முதல்வருக்கு சில இத்தாலிய இயேசு சபையினரே தமக்குதவியாக அனுப்பும்படி எழுதிய மடலில் இருந்து ஆரம்பித்தது எனலாம். இந்த மடலை அப்போது யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த மேற்குறிப்பிட்ட இரண்டு ஸ்பானிய சிஸ்டர்சியன் சபைக்குருக்களின் தூண்டுதலினால்தான் ஆயர் பெற்றக்கீனியவர்கள் எழுதினார் என்று செமேரியா அமதியவர்கள் கருதினார். செமேரியா அடிகளின் கருத்துப்படி ஆயர் பெற்றக்கீனி அவர்கள் இயேசுசபையின் அனைத்துலக முதல்வருக்கு மடல் எழுத நிர்ப்பந்திக்கப்பட்டார்.

ஏனெனில் அவர் அவ்வாறு எழுதாவிட்டால் மேற்குறிப்பிடப்பட்ட இரு ஸ்பானியக் குருக்களும் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டத்தை விட்டு வெளியேறக்கூடும் என்று அதே வேளையில் இன்னும் மறைப்பணியாளரின் தேவை யாழ்ப்பாணத்திற்கு இருந்தமையும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

அத்துடன் செமேரியா அடிகளின் எண்ணப்படி எதுவித சந்தேகமும் இன்றி ஏற்கனவே நன்கு நிறுவனமயப்படுத்தப்பட்ட, அனுபவம் நிறைந்த இயேசு சபையினர் யாழ்ப்பாணம் வந்தால் ஆரம்பிக்கப்பட்டு சில வருடங்களேயானதும் அப்போதுதான் யாழ்ப்பாணம் வந்தவர்களுமான அமலமரித்தியாகிகள் சபையினர் வெளியேற வேண்டியேற்படும் என்று இந்த இரு ஸ்பானிய சிஸ்டர்சியன் சபைக்குருக்களும் எதிர்பார்த்திருந்தார்கள்.

(தொடரும்...)

## மட்டக்களப்பு குருக்கள்மட புனித அசிசியார் திருத்தல யாத்திரை

யாழ் மறைமாவட்ட பங்குகளின் புனித அசிசியார் சபையினர் SFO கடந்த 13ந் திகதி முதல் 15ம் திகதி வரை மேற்படி திருத்தல யாத்திரையை மேற்கொண்டனர்.

சபையினர் 15.01.2017 ஞாயிற்றுக் கிழமை அசிசியார் ஆலயத்தை தரிசித்து நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர். இவ்வாலயத்தைக் கட்டியெழுப்பிய குருக்கள்மடத்தை சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் திருவாளர் அருளப்பு ஆசிரியர் அவர்களையும் அவர் குடும்பத்தையும் சந்தித்தனர்.






இதற்கிடையில் மட்டக்களப்பு தேற்றாத்தீவு புனித யூதாததேயு ஆலயத்தில் இடம் பெற்ற இவ்வாண்டிற்கான வாக்குத்தத்த திருவிழிப்பு ஆராதனைகளில் பங்கு பற்றி 17ம் ஆண்டிற்கான வாக்குத்தத்த திருவசனங்களைப் பெற்றுக்கொண்டனர்.

சொறிக்கல்முனையில் உள்ள திருச்சிலுவை ஆலயம் உட்பட பல ஆலயங்களை தரிசித்த அசிசியார் சபையினர் மட்டுநகர் மறைமாவட்ட ஆயர் மேதகு யோசவ் பொன்னையா ஆண்டகை அவர்களையும் சந்தித்து அவருடைய ஆசீரையும் வாழ்த்துக்களையும் பெற்றுக் கொண்டு யாழ் திரும்பினர்.

**- திருமதி. புனிதம் அருளானந்தம் SFO**

## சிந்திக்க வேண்டிய கூற்று

ஒருமுறை தலாய்லாமா அவர்களிடம், "மனித இனத்தில், தங்களை மிகவும் வியப்பில் ஆழ்த்திய விடயம் என்ன" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "மனிதர்தான்" என சட்டென பதில் சொன்னார். "ஏனென்றால், மனிதர்கள் பணம் சம்பாதிப்பதற்காக தனது உடல் நலத்தை தியாகம் செய்கிறார்கள். பிறகு, இழந்த உடல்நலத்தைத் தியாகம் செய்கிறார்கள். பிறகு, இழந்த உடல்நலத்தைத் திரும்பப் பெறுவதற்காக சம்பாதித்த பணத்தைத் தியாகம் செய்கிறார்கள். பிறகு, நிகழ்காலத்தை அனுபவிக்க மறந்து, எதிர்காலத்தை எண்ணி கனவுலகில் மிதக்கிறார்கள். அதன் விளைவாக, நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தில் வாழ முடியாமல் தவிக்கிறார்கள். தமக்கு இறப்பே இல்லை என்ற இறுமாப்போடு வாழ்கிறார்கள். கடைசியில், வாழாமலே சாகிறார்கள்" என்றார். சிந்திக்க வேண்டிய கூற்று இது.



## திருத்தந்தையின் கண்காணிப்பில், புலம்பெயர்ந்தோர் பிரிவு

இவ்வாண்டு ஜனவரி 1ம் திகதி முதல், வத்திக்கானில் தன் பணிகளைத் துவங்கியுள்ள, ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவை, குடிபெயர்ந்தோர், மற்றும் புலம் பெயர்ந்தோருக்கென தனிப்பட்ட ஒரு பிரிவைத் துவக்கியுள்ளது.

திருத்தந்தையின் நேரடிக் கண்காணிப்பில் செயற்படும் இப்பிரிவு, @M_RSection என்ற பெயரில், சமூக வலைத்தளங்களில் செய்திகளையும், டுவிட்டர் செய்திகளையும் பகிர்ந்து வருகிறது.

கடந்தமாதம் 15ம் திகதி கடைப்பிடிக்கப்பட்ட 103வது உலக புலம்பெயர்ந்தவர் நாளையொட்டி, துவக்கப்பட்ட இந்த முயற்சிக்கென, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஜனவரி 12ம் திகதி முதல், 15ம் திகதி வரை டுவிட்டர் செய்திகளைப் பகிர்ந்துவந்தார்.

அதேவண்ணம், மனித வர்த்தகத்திற்கு எதிரான உலகநாள், பெப்ரவரி 8ம் திகதி கடைப்பிடிக்கப்பட்டவேளையில், திருத்தந்தை தன் டுவிட்டர் செய்திகளை, பெப்ரவரி 6, 7, மற்றும் 8 ஆகியநாட்கள், @M_RSection என்ற முகவரியில் வெளியிட்டுள்ளார்.

# திருத்தந்தையின் மறை உரைகளிலிருந்து....



⌘ மக்களின் சூழ்நிலையைப் புரிந்துகொண்டு, ஆண்டவரோடு அவர்கள் முன்னோக்கிச் செல்வதற்கு உதவுபவர்களாக இருப்பவர்க்ளே அருட்பணியாளர்கள்.

⌘ ஒவ்வொரு மனிதரின் இதயத்தின் உள்ளே மறைந்துள்ள ஆழமான ஆசைகளை நோக்கக்கூடிய கடவுளின் அன்பு, நம் வாழ்வில் எல்லாவற்றுக்கும் மேலாக முதன்மை இடம்பெற வேண்டும்.

⌘ இறைவன் தம்மை அன்பு கூர்கிறார் என்ற உண்மையில் பிறக்கும் மகிழ்வு, மற்றவரோடு பகிரப்படும்போது பலுகிப் பெருகுகின்றது.

⌘ இறை இரக்கத்திற்கு முன்வைக்கப்படும். மனம் வருந்தும் பாவியின் பாவங்களுள் ஒன்றுகூட இறைவனின் மன்னிப்பு எனும் அரவணைப்பிலிருந்து விலக்கி வைக்கப்படுவதில்லை.

⌘ துன்பம் ஏன் என்ற கேள்விக்கு பெரும் இறையியல் விளக்கங்கள் தருவதற்குப் பதில், துன்பத்தை அன்பால் வெல்ல முடியும் என்பதையே இயேசு தன் வாழ்வில் சொல்லித் தந்தார்.

⌘ மனித உயிர் மற்றும் மனித இயல்பு ஆகியவற்றில் ஊன்றிய ஆன்மீக விழுமியங்களை இவ்வுலகிற்கு எடுத்துச் சொல்வதே கத்தோலிக்கத் திருஅவையின் தலையாய கடமை.

⌘ ஆணவம் மிகுந்த அதிகாரத்தாலும், ஆயுதங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் அடக்குமுறையாலும் உருவாகும் அமைதி பொய்யானது. மனிதர்கள் மீது காட்டப்படும் உண்மையான மதிப்பு, சுதந்திரம், நீதி இவற்றின் அடிப்படையில் உருவாகும் அமைதியே நிலையானது.

⌘ குருத்துவத்தைப் பயன்படுத்தி அதிகாரம் செய்யும் போக்குடைய மதத்தின் அறிவாளிகளுக்கு, தாழ்மையும், எளிமையும் கொண்ட நம்பிக்கையாளர்கள் பலியாகின்றனர். இந்தப் போக்கு மிகவும் மோசமானது. இது திருஅவையில் இன்றும் நிலவுகிறது.

⌘ நம்பிக்கையின்மை, அக்கறையின்மை மற்றும் அறியாமை நிறைந்த சமுதாயத்திற்கெதிராய்ப் போரா-டிய பெண் அன்னை மரியா மேலும் நற்செய்தியின் மகிழ்வை உறுதிப்படுத்தவும், நற்செய்திக்கு உயிரூட்டம் அளிக்கவும் போராடியவர் மரியன்னை.

⌘ நினைவு என்பது நமக்குமுன் வாழ்ந்து சென்ற, பெற்றோர், மூதாதையர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வாழ்வின் அடையாளங்களை மட்டும் கொண்டிருப்பதல்ல. மீட்பு வரலாறு முழுவதும் பிரசன்னமாக இருக்கின்ற இறைவனைப் பற்றிய நினைவுகளைக் கொண்டிருப்பதே மிகவும் சிறப்பான நினைவு.

⌘ தலைமுறைகளுக்கிடையே உரையாடல் நடத்துவதில் ஒருபோதும் தளர்ச்சியடையாமல், அன்றாட வாழ்வின் யதார்த்தத்தில் வாழ்வதற்கு, இறைவார்த்தை மற்றும் நம்பிக்கை வாழ்வை வழிகாட்டியாகக் கொண்டிருங்கள்.

⌘ வறுமையிலும், வலுவிழந்த நிலையிலும், நம்மில் ஒருவராகப் பிறந்ததன் வழியே, இறைவன் நம்மீது அன்பு கொள்கிறார், தன் மென்மையால் அவர் பக்கம் நம்மை ஈர்த்துக்கொள்கிறார்.

⌘ இளையோர் தங்கள் இதயங்களிலும், வாழ்விலும். ஆண்டவர் இயேசுவை அனுமதிப்பதன் வழியாக, நம்பிக்கையில் உறுதியாய் நிலைத்து நிற்கவேண்டும்.

⌘ வன்முறையற்ற அகிம்சை வழியைக் குறித்து இயேசு போதித்தவற்றை முழுமையாக ஏற்று, அவற்றை பின்பற்றுவதே அவரது உண்மையான சீடர்களின் இலக்கணம்.

⌘ வன்முறையற்ற அகிம்சை, ஓர் அரசியல் வழிமுறையாக அமையவேண்டும்.

⌘ நம் தீர்மானங்கள், நம் உறவுகள் மற்றும் நம் செயல்களில் வன்முறையற்ற தன்மை முத்திரை பதிப்பதாய் இருக்கவேண்டும்.

⌘ உலகில், பல்வேறு நிலைகளில் தவறாகப் பயன்படுத்தப்பட்டு துன்புறும் சிறுவர்களை பாதுகாப்பது ஆயர்களின் கடமை.

⌘ நம்பிக்கை என்பது வாழ்ந்து காட்டப்பட வேண்டிய ஒரு பயணம். இப்பயணம், சான்று பகரக்கூடியதாக இருக்கவேண்டும்.

⌘ உண்மையான மறைப்பணி என்பது ஒரு போதும் மதம் மாற்றுவதாக இருக்காது மாறாக சான்று வாழ்வு வழியாக இயேசுவிடம் ஈர்ப்பை ஏற்படுத்துவதாக இருக்கவேண்டும்.

---

# வளன் பப்பாவின் கேள்வி பதில்கள்




**கேள்வி: அன்புள்ள வளனார் பப்பா வணக்கம். இதுவரை நாளும் நீர் எங்கே ஒழிந்திருந்தீர்?**

*ஆஷா,நவாலி*

பதில் : இதுவரைநாளும் நான் பைபிளுக்கே (Bible) ஒழிந்திருந்தேன் யாரும் என்னைக் கண்டுபிடிக்கவில்லை. சரி இடத்தைமாற்றி கை தொலைபேசிக்குள் ஒழிந்திருப்போம் என்று ஒழிந்துகொண்டேன். அடுத்த வினாடியே கண்டுபிடித்து விட்டார்கள்.

**கேள்வி: வளனார் பப்பாவுக்கு வணக்கம். அமெரிக்க ஜனாதிபதி றொனால் ட்றம் பதவியேற்றதும் அதிரடி மாற்றங்களைக் கொண்டு வந்து உலகையே அதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறாரே! நீர் என்ன நினைக்கிறீர்?**

*காந்தருபன், மல்லாவி*

பதில் : முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தெருவெளிச்சத்தில் படித்து அமெரிக்க ஜனாதிபதி ஆனார் என்பதைத் தெரியாமல் பல மாணவர்கள் இன்னும் ஆடம்பர மோகத்தைத் தேடி அலைவதும் அதிர்ச்சி அளிக்கிறதுதான்! மக்கள் மனதை வெல்லாத எந்த மாற்றமும் "ஏ மாற்றமே"

**கேள்வி: பப்பாவுக்கு வணக்கம். கை தொலைபேசி பற்றி நீர் என்ன நினைக்கிறீர்..?**

*சுமதி, இளவாலை*

பதில் : மனித உறுப்புக்களிலே 'கை' ஒரு மரியாதைக்குரிய உறுப்பாகத்தான் இருந்தது. இந்தத் தொலைபேசி வருகிறவரைக்கும். எண்டைக்கு உந்த தொலைபேசி கையில வந்து சேர்ந்ததோ, அண்டைக்கே இந்த கைக்கே உண்டான மரியாதை போச்சு! "கூடாநட்புகேடாய் முடியும்" என்பது இதுதானோ..?

**கேள்வி: வளனாரே, பங்குப் பணிகளுக் குருக்கள் தேவைப்படுகிறபோது "குருக்கள் தட்டுப்பாடு" என்று திருச்சபை முறைப்படுகிறது. பின்னர் ஏன் பயிற்சி என்று 7 ஆண்டுகள் காலத்தை இழுத்தடிக்கிறது. உயர் தரம் முடிய 2,3 ஆண்டுகளிலே குருப்பட்டம் அளித்து பணிக்கு அனுப்பினாலென்ன?**

*ரூபன், மானிப்பாய்*

பதில்: குழந்தை குடும்பத்திற்குத் தேவை என்பதற்காக 2, 3 மாதங்களிலேயே சிசேறியன் செய்யலாமா? அப்படித்தான் இதுவும்.

**கேள்வி: பப்பாவுக்கு வணக்கம். வீதிவிபத்துகள் பற்றிச் சொல்லுங்களேன்?**

*தர்மசீலன், துணுக்காய்*

பதில்: தம்பி அது "வீதி விபத்து" அல்ல "விதி விபத்து" கஸ்ரப்பட்டுப் பெற்றோர் வளர்த்து, படிக்க வைத்து, ஆளாக்கிவிட, வாழ்வில் சாதிக்க வேண்டுமென்ற இயற்கைவிதி, "விபத்துக்குள்ளாகிறது". அவ்வளவுதான்!

**கேள்வி: வளனாரே, பெப்ரவரி 14 காதலர் தின மாச்சே! கொண்டாடவில்லையா?**

*சுமன், மிருசுவில்*

பதில் : நான் திண்டாட்டங்களுக்கு திகதி குறிக்கும் நாட்களைக் கொண்டாடுவதில்லை! றோட்டில எழுதிறது, றோசாப்பு கொடுக்கிறது உதுகளை விட்டிட்டு, மனசோட மனசு பேசி, குடும்ப வாழ்வுக்கு பக்குவப்படுங்கள்.

**கேள்வி : பப்பாவுக்கு நான்** Face book **ல இருக்கிறன்.** Whatsapp **ல இருக்கிறன்.** Twitter **ல இருக்கிறன்.** IMO **ல இருக்கிறன். இதைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?**

*கவிசாந், யாழ்*

பதில்: அப்ப நீர் வீட்டில இல்ல என்டு நினைக்கிறன்.

**கேள்வி: வளனார் பப்பா வணக்கம். உலக நோயாளர் தினம் பெப்ரவரி 11ம் திகதியாமே அதைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?**

*வளன், அல்லைப்பிட்டி*

பதில்: இன்று "உலகநோய்" என்பது மனதில் பிறரன்பு இல்லாத தன்மையே! நம் சூழல் காற்றில் பற்றி எரியும் தீமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தாலே உலக நோயாளர் தினம் நினைவு கூரும் தேவை இராதென நினைக்கிறேன்.

**கேள்வி: வளனாரே இவ்வாண்டு புனித யோசப் வாஸ் ஆண்டு என்று பிரகடனப்படுத்தியுள்ளனரே. சில ஆண்டுகளுக்கு முன்னரும் இதைத் தானே பிரகடனம் செய்தனர். இப்போது இது தேவைதானா?**

*அமலன், கிளிநொச்சி*

பதில் : இந்த ஆண்டு மட்டுமல்ல இந்த நூற்றாண்டு முழுவதும் இவரைப் பற்றிச் சிந்தித்தாலும் போதாது. அந்த அளவுக்கு அவரின் ஆன்ம வாஞ்சை வெளிப்பட்டது. இது ஒவ்வொரு பொது நிலையினனுக்கும் திருநிலையினனுக்கும் ஏற்படவேண்டும் என்பதே இலங்கைத் திருச்சபையின் எதிர்பார்ப்பு. அதனால் தான்.

**கேள்வி: வளனாரே, சென்ற ஆண்டு திருவழிபாட்டுக் கலண்டரை இந்த ஆண்டும் பயன்படுத்தினாலென்ன? இம்முறையும் நத்தார் 25ம் திகதி தானே வருகிறது?**

*கரன், ஊர்காவற்துறை*

பதில் : ஒரு 150 ரூபா செலவு செய்ய முடியாதா உம்மால்? திருவழிபாட்டுக் கலண்டரை உற்றுப்பாரும். வழிபாட்டு ஆண்டு, திருப்பலி வாசகங்கள் என்பன ஆண்டுக்கு ஆண்டு வேறுபடுகிறது இவ்வாண்டு வாரநாட்கள், ஞாயிறுதினம் என்பன ஆண்டு 1.(இது நீர் படித்து பெயிலான ஆண்டு 1 அல்ல)

ப்பாவிடம் கேள்வி கேட்க விரும்புவோர் கேள்விகளை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பவும்
360, புனித வளன் அச்சகம், பிரதான வீதி. யாழ்ப்பாணம்

# கலைஞர்களின் இசைப்படைப்புக்கள் தொடர்ச்சியாக வெளிவர வேண்டும்

## யாழ்.மறைமாவட்ட நிதியாளர் அருட்தந்தை நேசன்

எங்களுடைய தேசத்திலேயே பாடல்கள் எழுதப் பட்டு இசையமைத்து பாடப்பட்டு வெளிவருவது எமது தேசத்தின் கலைவளர்ச்சியைக் காட்டுகின்றது. இவ்வாறான கலைஞர்களின் இசைப்படைப்புக்கள் தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என யாழ்.மறை மாவட்ட நிதியாளர் அருட்தந்தை நேசன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

அருட்தந்தை தயாகரன் அடிகளாரின் "காருண்யம்" இறுவட்டு வெளியீடு அண்மையில் திருமறைக் கலா மன்ற கலைத்தூது கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

**அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,**

கிறிஸ்தவ பாடல்களின் வரலாற்றைப் பார்க்கும்போது தென்னிந்தியாவிலிருந்து அப் பாடல்களை கொண்டு வந்து



இங்கு பயன்படுத்தினோம். இதன் பின்னர் குறிப்-பாக போர் காலத்திலும் அதன் பின்னரும் குருக்கள், எழுத்தாளர்கள் தமது பாடல்களை எழுதி இந்தியா சென்று அங்குள்ளவர்களால் பாடல்களை பாடி இங்கு அறிமுகப்படுத்தியிருந்தார்கள்.

ஆனால் இன்று எமது இடங்களிலேயே எமது மாவட்டத் திலேயே பாடல்களை எழுதி, இசையமைத்து, வெளி யிட்டு வைக்கும் நிலை உருவாகியுள்ளது. இது எமது தேசத்தின் கலைத்துறை வளர்ச்சியைக் காட்டு கின்றது.

அருட்தந்தை தயாகரனினால் வென்றவன், தாயோடு தந்தை, வெள்ளம், காருண்யம் என்ற தலைப்புகளில் அமைந்த இறுவட்டுக்கள் வெளியிடப்பட்டமை பாராட் டத்தக்கது.

இது முற்றுமுழுதாக இங்கேயே உருவாக்கப்பட்டுள் ளது. இவரது படைப்புக்கள் தொடர வேண்டும் எனத் தெரிவித்தார்.

குறித்த வெளியீட்டு நிகழ்வில் இறுவட்டினை அருட் தந்தை தயாகரனின் பெற்றோர் திரு.திருமதி மரிய நாயகம் தம்பதியினர் அறிமுகப்படுத்தி யாழ். ஆயர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்பாருங்கள்

## அடுத்த இதழில் இருந்து

## வாழ்க வளமுடன் வாழும் போதே வாழ்த்துவோம்

கத்தோலிக்க இயல் இசை நாடகக் கலைஞர்கள் - எழுத்து மற்றும் புத்தக படைப்பாளிகள் - செய்தியாளர்கள் - சேவையாளர்கள் மற்றும் சாதனை யாளர்களின் சாதனைகளை பாராட்டி பதிந்து கௌரவிக்கும் ஒரு பக்கத் தொடர் வெளிவரவுள்ளது.

மறைக்கோட்ட முதல்வர்களே, பங்குத் தந்தையர்களே, நிறுவனக்குருக்களே, நலன்விரும்பிகளே !

சாதனையாளர்களை இனங்காட்டுங்கள். அவர்களைப் பாராட்டி வாழ்த்த துணை செய்யுங்கள்.

அண்மையில் நடந்தேறிய மேய்ப்புப் பணி மாநாட்டின் தீர்மானங்களில் ஒன்றாக இப்பணியை ஆற்றும்படி யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் அழைப் பில் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் "வாழ்க வளமுடன் - வாழும் போதே வாழ்த்துவோம்" என்னும் பகுதியின் ஆசிரியராகத் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா சேவை முலமாகப் பணிபுரிவார்.

எழுத்துப்பணியில் 35 ஆண்டு (1979 - 2017) அனுபவம் - பாதுகாவலன் ஆசிரியராக 10 ஆண்டு அனுபவம் (1997 - 2007) உதயன் பத்திரிகையில் கத்தோலிக்க பக்கத்தை இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமாக (2015 - 2017) நடத்தி வரும் அனுபவம் - காலைக்கதிர் பத்திரிகையில் கிறீஸ்தவ செய்தி இதழை இவ்வாண்டில் இருந்து நடத்தி வரும் அனுபவம் என்பவற்று டன் இப்பணியையும் இணைத்து ஆற்ற வுள்ளார். ஊடக விரிவுரையாளராக யாழ்.பல்கலைக் கழகம் - இலங்கை திறந்த பல்கலைக் கழகம் - பிசப் சவுந்தரம் மீடியா சென்றறின் இயங்கும் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவ னங்கள் ஆகியவற்றில் பணியாற்றிய அனுபவம் துணை நிற்க இப்பணியை ஆற்றுவார்.

இப்பணிமுலம் யாழ் மறைமாவட்ட சாதனையாளர்கள் பாராட்டி கௌரவிக் கப்பட்டு இன்னும் அதிக பணியாற்றவும் தம்பணிக்காக கௌரவிக்கப்பட்டோம் என்று மனம் மகிழ்வும் நிறைவும் பெறச் செய்யும்.

இத்தொகுப்பு நூல் வடிவம் பெறும் என்பதோடு சிறந்த சாதனையாளர்கள் காலத்திற்குக் காலம் கௌரவிக்கப்பட வும் பிசப்சவுந்தரம் மீடியா சென்ரர் நட வடிக்கை எடுக்கும்.

சம்பந்தப்பட்ட அனைவரும் இப்பணிக்கு கைகொடுக்க வேண்டும் என அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். சாத னையாளர்களும் தம் விபரங்களை அனுப்பி வைக்க முன்வர வேண் டும். இலைமறை காயாக இருக்கும் சாதனையாளர்களை பற்றி அறிந்தவர் கள் அவர்களின் வாழ்வையும் பணி யையும் வெளிக் கொணர வேண்டும்.

அனைவரையும் வளமுடன் - வாழும் போதே வாழ்த்துவோம்!

**தகவல்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**
அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை,
இயக்குனர்,
பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்,
891,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
0777 165 147
மின்அஞ்சல்: info@tcnlnet.com

# மறைமாவட்ட இணையத்துக்கான செய்திகள்

யாழ். மறைமாவட்டத்திற்கான இணை யத்தளம்புதிதாகஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்விணையதளத்தில் மறைமாவட்டச் செய்திகள், தரவுகள், ஒலி-ஒளிப் படங் கள், பாதுகாவலன் பத்திரிகை அடங் கலாக பல விடயங்களை பார்வையிட லாம்.

இவ்விணையதளத்தில் உங்கள் பங் கின் திருவிழாக்கள், பக்தி சபை விசேட செயற்பாடுகள், மற்றும் பங்கின் ஏனைய விடயங்களை பதிவேற்றவிரும்புவோர் தகவல்களை பின்வரும் மின்அஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கவும்.

அனுப்பப்படும் செய்திகளனைத்தும் பங்குத்தந்தையர்களின் சிபாரிசு பெற்றி ருக்கப்பட வேண்டும்.

இவ்விணையதளத்தை பயன்படுத்தி பிறருக்கும் அறிமுகப்படுத்தி உதவ வேண்டுகின்றோம்.

**மின்னஞ்சல்:**
**jaffnarcdiocese@gmail.com**

**இணையதளம்:**
**www.jaffnarcdiocese.org**

## யாழ். மறைமாவட்டம்....

(01 பக்கத் தொடர்ச்சி...)

குடும்பங்களின் தேவை இயக்கத்தில் வளவாளராக, ஒருங்கிணைப்பாளராக பணியாற்றும் திரு நிமால் அவர்களும் கலந்துகொண்டு கருத்துப் பகிர்வை பதிவு செய்திருந்தார்.

24.01.2017 ஆம் திகதி மதியப் பொழுதோடுஅருட்தந்தையர்களுக்கான பயிற்சிகள் நிறைவடைய அதனைத் தொடர்ந்து 24.01.2017 தொடக்கம் 28.01.2017 வரையில் தமிழ் மறை மாவட்டங்களைச் சேர்ந்த முப்பது (30) அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான இரண்டாம் கட்டப் பயிற்சிக் கருத்த மர்வு மேற்படி அருட்பணி லைலி பெர் னாண்டோ, றொகான், நிமால் அவர் களால் முன்னெடுக்கப்பட்டது.

அருட்பணி டொமினிக் றொகான் (CMF) அவர்கள் முதன்மை வளவாளராக தலைமையேற்று வழிநடத்தியிருந்தார். மட்டக்களப்பு மறைமாவட்டத்திலிருந்து பத்து அன்பிய ஊக்குவிப்பாளர்களும் யாழ். மறைமாவட்டத்திலிருந்து இரு பது ஊக்குவிப்பாளர்களும் வெவ்வேறு பங்குகளை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவர்களுக்குள்ளே யாழ். மறை மாவட் டத்தைச் சேர்ந்த ஐந்து தியாக்கோன் களும், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் நான்காம் வருட இறை யியல் மாணவர்களும் பங்குபற்றிப் பயனடைந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி தொடர் பயிற்சிக் கருத்தமர்வு இம்மாதம் அதாவது 18.02.2017 - 19.02.2017 வரையிலான திகதி களில் அதே பொதுநிலையினர் ஊக்கு விப்பாளர்களும் 20.02.2017 தொடக் கம் 21.02.2017 வரை கடந்த குருக் களுக்கான பயிற்சிக் கருத்தமர்வில் சமூகம் தந்திராத குருக்களுக்கும் அன் பிய விழிப்புணர்வு கருத்தமர்வு பண்டத் தரிப்பில் தியான இல்லத்தில் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 25 ஆவது நோயுற்றோர்....

(01 பக்கத் தொடர்ச்சி...)

வல்லவராம்கடவுள்எனக்குஅரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். (லூக்கா 1:49) என்ற மரியன்னையின் சொற்களை மையக்கருத்தாகக் கொண்டு திருத் தந்தை வெளியிட்டுள்ள இச்செய்தியில், புனித 2ம் ஜான்பால் அவர்களால் உரு வாக்கப்பட்டு 1993ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வரும் இந்நாளை திருத் தந்தை நினைவு கூர்ந்துள்ளார்.

நோயுற்றோரும், அவர்களைப் பராம ரிப் போரும், நோயுற்றோரின் நலமாக விளங்கும் மரியன்னையை, இறைவ னின் அன்பு அடையாளமாகவும், அவரது திருவுளத்திற்கு தன்னையே கையளித் தவராகவும் காணவேண்டும் என்று திருத்தந்தை இச்செய்தியில் விண்ணப் பித்துள்ளார்.

லூர்து நகரின் மசபியேல் குகையில் அன்னை மரியாவைக் கண்ட புனித பெர்னதெத்து, தன் வாழ்வை எளியோ ரின் வாழ்வுக்கென அர்ப்பணித்தார் என் பதை தன் செய்தியில் சுட்டிக் காட்டியுள்ள திருத்தந்தை அன்னை வழங்கும் அருள் மிகுந்த தருணங்கள் அயலவரின் தேவைகளை நிறைவேற்றும் அழைப் பாகவே வந்துள்ளன என்று கூறியுள் ளார்.

இவ்வாண்டு நாம் சிறப்பிக்கும் 25 வது நோயுற்றோர் உலக நாளன்று, மருத்துவப் பணியில் ஈடுபட்டுள்ள மருத் துவர்கள், மற்றும் தாதியர்கள், தன்னார் வத் தொண்டர்கள் அனைவருக்கும் இறைவனின் ஆசீர் நிறைவாக கிடைக்க தான் செபிப்பதாக திருத்தந்தை இச்செய்தி யில் உறுதி அளித்துள்ளார்.

மோட்சபாதை விற்பனைக்குண்டு சொற்ப பிரதிகளே கையிருப்பில்.
தேவைப்படுவோர் கத்தோலிக்க அச்சக விற்பனை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதி ஒன்றின் விலை ரூபா 650/=

இவ்வார புனிதர்

# ஒனேசிமஸ்



இவர் இன்னும் கிறிஸ்துவை அறியாத அடிமையாக செல்வம் நிறை பிலோமின் வீட்டில் எடுபிடி வேலை பார்த்து வந்தார். எபேசு நகரில் புனித பவுல் பல காலம் தங்க வேண்டி வந்த சமயம், ஒருவேளை அந்த சமயம் ஒனேசிமஸ் பவுலின் அன்பைப் பெற்றுக் கொண்டிருக்கலாம். பவுல் 'இவரைத் திருமறையில் முறைப்படிச் சேர்த்தும் கொண்டார். இந்நிலையில்தான் பவுலுக்கும் பிலோமினுக்கும் அன்புப் பிணைப்பு ஏற்பட்டது. பிலோமின் கொலேசே நகருக்குக் குடியேறினார். அங்கு வசதி நிரம்பிய மாளிகை இவருக்குக் கிடைத்தது. கிறிஸ்தவ வழிபாடு நடைபெற்ற போதெல்லாம் இவ்வீட்டில் நடைபெற்றது.

ஒரு சமயம் பிலோமினிடம் வேலை பார்த்த அடிமை ஒனேசிமஸ் தான் செய்த ஒரு துரோகத்திற்குரிய தண்டனையிலிருந்து பிலோமினிடம் இருந்து தப்பிக்க வேண்டி உரோமைக்குப் பறந்துவிட்டார். தெய்வச் செயலாக இங்கே ஒனேசிமஸ் பவுல் அடிகளாரைச் சந்தித்துவிட்டார். இங்கேதான் பவுல் தமது முதல் சிறைவாழ்வைச் சந்தித்தார். இந்தச் சூழ்நிலையில்தான் பவுல், பிலோமினுக்கு மறைக்கல்வி புகட்டித் திருமுழுக்குக் கொடுத்தார். அதன்பின் ஒனேசிமஸின் நற்குணங்களால் ஆட்கொள்ளப்பட்ட பவுல் அவரைத் தமக்கு உதவிக்காக அருகிலேயே வைத்துக்கொள்ள விழைந்தார். இருப்பினும் ஒனேசிமஸ் தமது தலைவர் பிலோமினுக்கு இழைத்த அநீதிக்கு ஈடுசெய்ய வேண்டிய கடமையைப் பவுல் உணர்ந்தார். அதன்படி ஒனேசிமஸை மனமுவந்து மன்னித்துத் தம்மை ஏற்றுக்கொள்வதுபோல் பிலோமின் ஏற்றுக்கொள்ள வேணுமென்ற விருப்பத்தைத் தெரிவித்துக் கடிதம் ஒன்று கொடுத்தனுப்பினார். கடிதத்தில் மிகக் கவனமாகக் குறிப்பிடப்பட்டது ஒனேசிமஸை இப்போது ஓர் அடிமையாக ஏற்றுக்கொள்ளாமல், தனக்கு மிகவும் உகந்த சகோதரனாக ஏற்றுக்கொள்ளும். பிலோமின் அவர்களே, என்னை உமது அன்புத் தோழனாக ஏற்றுக்கொள்கிறீரா? அவ்வாறாயின் அதே மனப்பான்மையுடன் எனது பெயரால் ஒனேசிமஸை ஏற்றுக்கொள்ளும்.

(காண்:பிலோ 16-18)

மடலை வாசித்த பிலோமின் அவ்விதமே ஒனேசிமஸை ஏற்றுக்கொண்டார். மன்னித்துவிட்டதுடன், முழு விடுதலை அளித்து மீண்டும் உரோமைக்கே அனுப்பி வைத்தார். அங்கே சில காலம் பவுலுக்கு உதவிக்கரம் நீட்டினார். பாரம்பரியக் கூற்றின்படி கடைசி நாட்களில் ஒனேசிமஸ் மாசிடோனியாவில் பெரேயா பகுதிக்கு ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார். இங்கே மறைசாட்சி மரணம் பெற்றார்.

## சிந்தனை

"பிறரது குற்றங்களையும் எல்லாவிதப் பிணிகளையும் பொறுமையோடு சகிக்கக் கற்றுக்கொள். ஏனெனில் பிறர் சகிக்க வேண்டியவை பல உன்னிடம் இருக்கின்றன. உனது விருப்பப்படி நீயே வாழ முடியாத போது உனது விருப்பப்படி பிறர் எப்படி வாழ முடியும்"


## விண்ணக வாழ்வின் 6ம் மாத நினைவஞ்சலி

தோற்றம்
14 . 04 . 1985



மறைவு
19 . 08 . 2016

"விண்ணக அரசரின் அழைப்பு வந்தது, அகமகிழ்ந்தேன். அவரின் திருப்பாதம் அடைந்தேன்".

அமரர்

*செல்வன். றெஜிஸ் செல்வநாதன் மெறில் கிளின்ரன்*

எம்மைவிட்டு 06 மாதம் மறைந்தாலும் உமது பாச நினைவுகள் என்றும் எம்மைவிட்டு அகலாது. என்றும் உம் நினைவால் வாழ்ந்திருப்போம். நீங்கா நினைவுகளுடன் உமது ஆன்மா சமாதானத்தில் இளைப்பாறுவதாக.

இவரின் பிரிவால் துயருறும்
அன்புத் தந்தை, தாய், சகோதரன்,
மைத்துனி, உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

118/1/1 கடற்கரைத்தெரு,
நீர்கொழும்பு.
077 -9929511
031- 2231936
077-4412333

மண்டைதீவு
3ம் வட்டாரம்.

AD11/2017


## திருத்தந்தையின் தவக்காலச் செய்தி

வருகிற மார்ச் முதல் நாள் தொடங்கும் தவக்காலத்திற்கென, "இறைவார்த்தை ஒரு கொடை. மற்ற மனிதர்களும் ஒரு கொடை" என்ற தலைப்பில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதியுள்ள தவக்காலச் செய்தி வெளியிடப்பட்டது.

இறைவார்த்தையிலும், அருளடையாளங்களிலும், மற்ற மனிதரிலும் கிறிஸ்துவைச் சந்திக்க நம்மையே புதுப்பித்துக் கொள்வதற்கும், நம் கண்களைக் கட்டிப்போடும் பாவத்தினின்று தூய்மையடைவதற்கும், தேவையில் இருப்போரில் கிறிஸ்துவைக் கண்டு அவர்களுக்குப் பணி செய்வதற்கும் ஏற்ற காலம், தவக்காலம் என்றும், இச்செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.


## நினைவஞ்சலிகள்

50ம் ஆண்டு | 12ம் ஆண்டு







அமரர்
மரியான் அந்தோனி
மண்ணில் : 09.10.1924
விண்ணில் : 20.02.1967

அமரர்
அந்தோனி எவுசேனி
மண்ணில் : 27.12.1932
விண்ணில் : 25.06.2005

"சீவியத்தில் உங்களை நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்"

ஓ மரணமே! உன் நினைவுகள் இனிமையானவை. நீதியில் வாழும் மனிதனுக்கு மரணத்தின் பயமே இல்லையே...

அன்புத் தெய்வமே இறைவா! நீர் எமக்கு அளித்த பெற்றோருக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். உமது அளவு கடந்த அன்பினால் அவர்களின் ஆன்மாக்களை உமது நித்திய அமைதியில் மகிழ்ந்திருக்கச் செய்தருளும்.

தவசிகுளம்,
கொடிகாமம்.

AD10/2017

அன்புடன் நினைவுகூரும்
பிள்ளைகள், குடும்பத்தினர்.



## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டில்

பிறப்பு
07 . 04 . 1935



இறப்பு
14 . 03 . 2016

அமரர்

*குருசுமுத்து அந்தோனிப்பிள்ளை*

(ஓய்வுபெற்ற காசாளர் யாழ். ப.நோ.கூ.)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

பாசமிகு தந்தையே! பாரினில் பரமனின் வழிகாட்டி பாசத்தை நாளும் பொழிந்து பல ஆண்டுகள் எமக்காய் பாடுபட்டு உழைத்தீர். பிள்ளைகள் வாழ பல துன்பங்களை வாழ்வில் அனுபவித்தீர். ஓராண்டு நிறைவுற்றாலும் ஒவ்வொருநாளும் எங்களுடன் ஒன்றித்துள்ளீர். விண்ணக வாழ்வில் இறைவனின் அரவணைப்பிற்குள் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

இல.57, கண்ணாபுரம்,
நாவாந்துறை.

AD9/2017

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்



## தாதியர் பயிற்சி நெறி

**DIPLOMA IN NURSING** (02 YEARS)
**NURSING ASSISTANT** (01 YEARS)
**GERIATRIC NURSING** (9 MONTH)



விண்ணப்ப இறுதித் தினம்
20.02.2017

***HOLY CROSS SCHOOL OF HEALTH SCIENCE***

க.பொ.த. சாதாரண (O/L) உயர்தரத்தில் (A/L) சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை திருச்சிலுவை தாதியர் பாடசாலை, இல.767/4 கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: 0213001102, 0771159391

767/4, பீச் றோட்,
யாழ்ப்பாணம்.

# அண்மைய நிகழ்வின் நிழல்கள்

மறை மாவட்ட பணித்தளங்களில் புதிய பொறுப்புக்களை ஏற்படுத்துகையில்...


கியூடெக் - கிளிநொச்சி



சங்கானை பங்கு


பாண்டியன்தாழ்வு பங்கு

அண்மையில் பணிமாற்றம் பெற்றுக் குருமுதல்வர் அருட்திரு. பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் முன்னிலையில் அருட்பணியாளர்கள் புதிய பொறுப்புகளை ஏற்பதை படங்களில் காணலாம்.



அருட்தந்தை தயாகரன் அடிகளாரின் "காருண்யம்" இறுவட்டு வெளியீட்டு நிகழ்வின் போது இறுவட்டினை அருட்தந்தை தயாகரன் அடிகளாரின் பெற்றோர் திரு.திருமதி மரியநாயகம் குடும்பத்தினர் யாழ் ஆயரிடம் ஒப்படைப்பதையும் முதல் பிரதியினை கொழும்புத்துறை சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்தந்தை கிருபாகரன் அடிகளார் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.



கியூடெக் கரித்தாஸ் நிறுவன சமாதான நல்லிணக்க செயற்திட்டத்தின் கீழ் கியூடெக் கரித்தாஸ் இயக்குநர் அருட்தந்தை இயூயின் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் சமாதானத்திற்கான வலுவூட்டலூடாக மாணவர்களுக்கு நம்பிக்கையூட்டலும் ஒன்றிணைதலுக்குமான கருத்துக்களும் குளமங்கால் றோ.க. பாடசாலையிலும், மாதகல் சென் யோசவ் பாடசாலையிலும் தை 25, 26 ம் திகதிகளில் நடைபெற்றது.








கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் நடாத்தப்படும் மகிழ்ச்சிகர கற்றலுக்கான செயற்திட்டத்தின் கீழ் அராலி வடக்கு அ. மி. த. க.பாட சாலை, துணைவி அ. மி. த. க. பாடசாலை, வட்டு மேற்கு அ. மி. த. க.பாடசாலை மாணவர்களுக்கான புத்தகபைகளும், பெற்றோருக்கான வாழ்வாதார உதவிகளும் இயக்குநர் அருட்பணி இயூயின் பிரான்சிஸ் அடிகளாரினால் வழங்கப்பட்டதுடன் மகிழ்ச்சிகர கற்றலுக்கான விழிப்புணர்வும் இயக்குநர் தந்தை அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. றொபேட் உதய குமாருடன் அதிபர், ஆசிரியர்கள் பங்குபற்றி மகிழ்வூட்டினர்.

திருத்தொண்டர்களாக அருட்சகோதரர்கள் அன்ரோ டெனீசியஸ், அன்ரன் துஸ்யந்தன், டெரன்ஸ் ஆகியோர் 12.01.2017 அன்று பேரருட்திரு. யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அவர்களினால் அருட்பொழிவு செய்யப்பட்டனர். புதிய திருத்தொண்டர் மேய்ப்புப் பணிக்காக பங்குத்தளங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்.



இந்திய ஆயர் பேரவையின் உயர் பொறுப்பாளர்களாகப் பணியாற்றும், கர்தினால் பசிலியோஸ் கிளீமிஸ், கர்தினால் ஜார்ஜ் ஆலஞ்சேரி, மற்றும் கர்தினால் ஆசுவால்டு கிரேசியஸ் ஆகியோர் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்களை, இவ்வாறம் சந்தித்தனர்.



கியூடெக் கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாவாந்துறை பொம்மைவெளி, மூர் வீதிப் பகுதிகளில் தைப்பொங்கல் விழா சர்வமத சமயத் தலைவர்களுடன் அரச உத்தியோகஸ்தர்களும், கியூடெக் கரித்தாஸ் இணைப்பாளரும், சமூகத்தவர்களும் ஒன்றிணைந்து கடந்த மாதம் 17,19,20ஆம் திகதிகளில் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம். 360. பிரதான வீதியில் அமைந்துள்ள அவரகளது அச்சகத்தில் 2017 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.